

# அன்பு பகிர்வு இயக்கம்

தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

மலர் : 12 இதழ் : 1 நவம்பர் – 2015

## செய்திமலர்

"முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" மத்தேயு 24 : 13

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். கல்சிங் பார்கி

## டெப்ரி, இராஜஸ்தான்



எனது பெயர் கல்சிங் பார்கி. நான் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள டெப்ரி கிராமத்தைச் சேர்ந்தவன். நான் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தேன். என்னுடைய சரீரத்தில் அடிக்கடி வியாதி ஏற்படும். மேலும் என்னுடைய சரீரத்தில் கட்டி இருந்தது. சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை.

இந்நிலையில் ஷாலோம் போதகர். பாதர் டோடியார் அவர்கள் எனக்கு இயேசுவைப் பற்றிக் கூறி, எனக்காக இயேசுவினிடத்தில் பாரத்தோடு ஜெபித்த போது தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் நாங்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து ஷாலோம் கும்புரா சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தேன். அதன் பின் ஊழியம் செய்ய வேண்டுமென்று தேவன் தரிசனத்தின் மூலம் பேசினார்.

பின்னர் ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயற்சி பெற்று, 2000–ம் வருடத்தில் எனது சொந்த கிராமமாகிய டெப்ரியில் 5 குடும்பங்களுடன் ஊழியத்தைத் தொடங்கினேன். தற்போது தேவனுடைய பெரிதான கிருபையால் 40 குடும்பங்கள் வாரந்தோறும் சபையில் இயேசுவை ஆராதித்து வருகிறார்கள். எங்கள் முழுக்கிராமமும் இரட்சிக்கப்பட வேண்டுமென்ற தரிசனத்துடன் நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். மேலும் இரண்டு கிளை சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mr. J. Jones,** Payanam

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 580 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 660 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 250 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து



**ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

தேவகிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், தியாகமான ஆதரவுகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. எத்தனையோ பிரச்சனைகள், போராட்டங்கள், எதிர்ப்புகள், தேவைகள், சரீர பெலவீனங்கள், ஊழிய பாரங்கள் மத்தியில் ஊழியங்கள் பரிசுத்த ஆவியானவரின் பெலத்துடன் நடைபெற உங்கள் அன்பான ஜெபங்களும், தியாகமான ஆதரவுகளுமே காரணம் என்பதில் சந்தேகமில்லை. தேவனுக்கு மகிமை செலுத்தி உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம்.

அக்டோபர் மாதத்தில் அனைத்து ஷாலோம் சபைகளுக்கான மூப்பர்கள் முகாம், சிறப்பு பெண்கள் கூடுகை, வாலிபர் (ஆண்கள், பெண்கள்) முகாம்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் மாத கூடுகைகளை நடத்த தேவன் கிருபை தந்தார். விசேஷமாக குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள சுமார் 600க்கும் அதிகமான சபைகளில் அக்டோபர் 4, 11, 18 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆராதனைகளை நடத்தவும், தேவகிருபையால் பீல் ஆதிவாசி விசுவாசிகள் ஷாலோம் மிஷனெரி தரிசன பணிக்காக தங்கள் சொந்த பீல் மக்கள் இரட்சிக்கப்பட உதாரத்துவமான காணிக்கைகளை கொடுத்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

நவம்பர் 17 – 20ம் தேதி வரை குஜராத்தில் பரூச் நகரில் நடைபெற உள்ள அனைத்து ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் குடும்ப அக்கினி முகாமில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் புதிய தரிசனங்களையும் ஊழியர்கள் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

கடந்த மாதத்தில் இராஜஸ்தானில் கட்லி, சிம்மல்கேடா, ஜக்கோடியா, மத்தியப்பிரதேசத்தில் அம்பா, பிப்ளிபாடா, நாத்துதாமணி, டிக்கிடி, குஜராத்தில் காப்பிரியா, டோபேனோ, ரீஸ்உம்புரா ஆகிய 10 கிராம ஆலயங்களை கட்டி முடிக்க தேவன் கிருபை தந்துள்ளார். டிசம்பர் மாத இறுதிக்குள் புதிய 25 கிராம ஆலயங்கள் கட்டிமுடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

நம்முடைய பீல் சுதேச ஊழியர்களுக்கும், பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கும் **கிறிஸ்துமஸ் வெகுமதிகள்** கொடுப்பதற்கான உங்கள் நன்கொடைகளை நவம்பர் மாத காணிக்கையோடு இணைத்து அனுப்ப உங்களை அன்புடன் கேட்கிறேன்.

**“நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்”. (ஏசாயா 62:3)** – கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# Ø¥Ü T¬VkRm ¨ûX¨ tTYú ]

சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, நாம் வாழும் இந்த பூமியிலே சகல ஜனங்களும் குறிப்பாக தேவ ஜனங்களாகிய நாம் இந்த பூமியின் முடிவு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறுக்கவே முடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்த நாட்களில் தம் சீஷர்கள் உலகத்தின் முடிவைக் குறித்தும் அவருடைய வருகையைக் குறித்தும் ஆர்வமாக கேட்டபோது இயேசு கிறிஸ்து மிக நேர்த்தியாக மத்தேயு 24, 25 அதிகாரங்களில் கூறியுள்ளார். மத்தேயு 24:3 வாசித்துப் பாருங்கள், **"பின்பு அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள். "**

**முடிவிற்கான அடையாளங்கள் :** மத். 24:6–12 வரை வாசித்துப் பாருங்கள்

* யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே ஆனாலும் முடிவு உடனே வராது.
* ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.
* இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.
* அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.
* அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.
* அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.
* அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துக் காரியங்களும் நிறைவேறிக் கொண்டிருப்பதை நாம் கண்டு கொண்டு இருக்கிறோம். **முதலாவது,** யுத்தங்கள், நோய்கள், இயற்கை பேரழிவுகள் போன்றவைகளை இதுவரை இல்லாத அளவிற்கு காண்கிறோம். **இரண்டாவது,** கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள உபதேசங்களும் பெருகுவதை காண்கிறோம். **மூன்றாவது,** மனிதர்கள் மத்தியில் அன்பு தணிந்து போகிறதை காண்கிறோம்.

**2 தீமோத். 3 : 1–5 வாசித்துப் பாருங்கள் :**

* மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.
* எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,
* சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,
* துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்,
* தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.

இயேசு கிறிஸ்து மத்தேயு 24ம் அதிகாரத்தில் உலகத்தின் முடிவைக் குறித்தும்; அவருடைய வருகையைக் குறித்தும் அநேக அடையாளங்களை எடுத்துரைத்த போதிலும் தேவ ஜனங்கள் சில காரியங்களை உணர்ந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும் என்று கூறியுள்ளார். நாம் அவைகளை கவனமாகக் கேட்டு, அதன்படி நடந்தால் வருகையில் நாம் அவருடன் இருப்போம். கவலையோ; பயமோ இன்றி நாம் மகிழ்ந்து களிகூரலாம். அவைகள் என்ன என்று பார்ப்போம்.

**1. ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.** மத். 24:4

இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு அடையாளங்களை சொல்லுவதற்கு முன்பாக முதலாவது சீஷர்களுக்கு சொன்ன காரியம் ஒருவனும் **வஞ்சியாதபடிக்கு** எச்சரிக்கையாயிருங்கள் என்பதே. கடைசி காலங்களில் மட்டுமல்ல ஆதியில் இருந்தே பிசாசானவன் கொண்டு வரும் ஆயுதம் **“ வஞ்சிப்பது” .** ஏதேன் தோட்டத்தில் ஏவாளை வஞ்சித்தது முதல் இயேசு கிறிஸ்துவை கூட தன் வார்த்தைகளால் வஞ்சிப்பது அவன் தந்திரமாகும்.

ஆகவே தேவ ஜனங்கள், சபைகள், ஊழியங்கள் பிசாசின் வஞ்சிக்கும் தந்திரங்களை அறிந்து குறிப்பாக 1 யோவான் 2:16ல் சொன்னபடி மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய காரியங்களில் எந்த உருவத்திலும், கோணத்திலும், சூழ்நிலைகளிலும் பிசாசானவன் நம்மை வஞ்சித்து விடாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

ஏதேன் தோட்டத்தில் ஏவாள் தனிமையாக இருந்த போது சாத்தான் சர்ப்பத்தின் வாயிலாக வஞ்சித்தான். ஒருவேளை ஆதாம். ஏவாள் இருவரும் இணைந்து இருந்தால் பிசாசானவன் நுழைந்திருக்க முடியாது. ஆகவே நம் வாழ்வில் தேவன் தந்த உறவுகளில் ஒருமனதுடன் நிலைத்திருப்போம். பரிசுத்தவான்களின் ஐக்கியம், சபை கூடுதல் உறவுகளில் குறிப்பாக கிறிஸ்துவுடன் உள்ள உறவில் பெலப்படும்போது வஞ்சிக்கப்படாதபடி பாதுகாக்கப்படுவோம்.

**2. முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத். 24:13)**

நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நித்திய ஜீவனை பெற்று இயேசுவுடன் பரலோகத்தில் மகிழ்ந்து களிகூர, இவ்வுலகத்தில் தேவன் நமக்கு தந்த இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம், தேவகிருபை இவைகளை காத்துக் கொண்டு முடிவு பரியந்தம் அவருடைய சித்தப்படி வாழ்ந்து முடிக்க வேண்டும். அதற்கு மிகவும் அவசியம் நிலைத்திருக்கும் அனுபவம். இயேசு கிறிஸ்து தம் உபதேசத்தில் மிக அழகாக நாம் நிலைத்திருக்க வேண்டும் என்பதை கூறியுள்ளார். கடந்த VBS (CBC)–ல் எங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கு தெளிவாக கற்றுக் கொடுத்த பாடம் **“நிலைத்திருங்கள் ”**

1) என்னில் (இயேசுவில்) நிலைத்திருங்கள் யோவான் 15:4
2) வேத வசனத்தில் நிலைத்திருங்கள் யோவான் 15:7
3) கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருங்கள் யோவான் 15:9
4) விசுவாசத்தில் நிலைத்திருங்கள் 1கொரிந். 16:13
5) ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள் ரோமர் 12:12
6) தேவகிருபையில் நிலைத்திருங்கள் 2 தீமோத். 2:1
7) சகோதர சிநேகத்தில் நிலைத்திருங்கள் சங். 133:1

இவைகளில் நாம் உறுதியாய் நிற்கும் போது முடிவு பரியந்தம் நிலைத்திருந்து அவர் வருகையில் அவருடன் மகிழ்ந்து களிகூருவோம்.

**3. விழித்திருங்கள் (மத். 24:42)**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீஷர்களிடம் கூறிய அடுத்த ஆலோசனை விழித்திருங்கள் என்பதே. பவுலடியார் சபைக்கு எழுதும் போது, ஆகையால் தூங்குகிற நீ விழித்து என்று எச்சரிக்கை தருகிறார். ஒரு தாலந்தை பெற்றுக் கொண்டவன் சோம்பலாக இருந்தான். ஐந்து கன்னிகைகள் வருகை குறித்து அறிவில்லாதபடி தூங்கிவிட்டார்கள். இயேசு கிறிஸ்து தம் சீஷர்களிடம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும் என்று கூறினார். **மத். 26:41 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.** பிசாசின் சோதனைகளை அறிந்து கொள்ளவும், அவைகளிலிருந்து வெற்றி பெறவும்; தேவனுடைய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள, தேவ வல்லமையில் பெலப்பட சாட்சியாய் ஜீவிக்க விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் ஊழிய பாதையிலும் சத்துருவின் சதிகளை அறிந்து விழித்திருந்து ஜெபிக்கும் போது முடிவுபரியந்தம் வெற்றி பெறுவோம்.

**4. கடைசியாக ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44)**

கடைசி காலங்களில், உலகத்தின் முடிவு நாட்களில், குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்மை சுற்றி அநேக சூழ்நிலைகள் மாறலாம், அடையாளங்கள் காணப்படலாம். நாம் அதைக் குறித்து பயப்படவே வேண்டாம்.

இயேசு கிறிஸ்து நம்மை ஆயத்தமாயிருக்க எச்சரிக்கை தந்துள்ளார். **எசேக்கியேல் 38:7** வாசித்துப் பாருங்கள், **"நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு"** என்ற வசனத்தின்படி நம் பாரத தேசத்தை ஆயத்தப்படுத்துவோம்.

**"சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும்".** (மத். 24:14) – இயேசு கிறிஸ்து சொன்ன முடிவு காலத்திற்கான அடையாளங்களில் பல எதிர்பாராத காரியங்கள் காணப்பட்டாலும், காணக்கூடிய மாறுதல்களைக் கூட கண்களால் காண முடியும். அவைகளில் ஒன்று தான் உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுதல் என்ற முக்கியமான காரியமாகும். 1950ம் வருடங்கள் வரை இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு எழுப்பப்பட்ட சபைகளின் வளர்ச்சி 2000ம் வருடத்தில் அதாவது 1950ம் வருடங்கள் பணியானது **50 வருடங்களில் 2 மடங்கிற்கும் அதிகமாகி உள்ளது.**

அதுமட்டுமல்ல, 2010ம் ஆண்டில் 50 வருடங்களில் வளர்ச்சியடைந்த பணி 10 வருடங்களில் 2 மடங்கிற்கு அதிகமாகி உள்ளது. கடந்த 5 வருடங்களில் தேவன் பாரத தேசமெங்கும் தம்முடைய வல்லமையை ஊற்றி சகல ஜாதிகள் மத்தியில் கிரியை செய்து வருகிறார். நம் பாரத தேசம் மட்டுமல்ல உலகமெங்கும் தேசங்களில் நற்செய்தி தீவிரமாக அறிவிக்கப்பட்டு சபைகளை உருவாக்க தேவன் திறந்த வாசலை தந்துள்ளார்.

குறிப்பாக பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் வெள்ளி விழா ஆண்டிற்குள் (2015–2016) 1000 திருச்சபைகள், 1000 பீல் சுதேச ஊழியங்களை தேவன் தந்து இலட்ச குடும்பங்களை தேவனண்டை நடத்த கிருபை தருகிறார். கர்த்தருக்கு சித்தமானால் 2020ம் ஆண்டிற்குள் தேவன் தந்த தரிசனப்படி முழு பீல் மக்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நீங்களும் ஆயத்தமாவது மட்டுமன்றி உங்களை சுற்றியுள்ளவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து அவர்களை ஆயத்தப்படுத்துங்கள். கிறிஸ்துவின் வருகையில் இயேசு கிறிஸ்து தாமே உங்களை அரவணைத்து ஆசீர்வதித்து தம்முடைய சந்தோஷத்தில் உங்களை பிரவேசிக்க செய்வார். ஆமென்.

**மாரநாதா ! இயேசுவே சீக்கிரமாய் வாரும்! அல்லேலூயா!**

## முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும். தொடர்புக்கு : **9698144522**

# கிறிஸ்துமஸ் பண்டிகையை
# ஆதிவாசி மக்கள் கொண்டாட உதவுங்கள்



**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி".** யோவான் 1:9

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல், அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி செய்யக் கர்த்தர்தாமே பலப்படுத்துவாராக!

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையை மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்திலும் கொடுத்து வருகிறோம்.

இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 15 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் **ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1500/– அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு பீல் ஆதிவாசி மாணவருக்கு குறைந்தது ரூ. 500/– அல்லது அதற்கு மேலாகவோ,** கிறிஸ்துமஸ் வெகுமதியாக அக்டோபர் அல்லது நவம்பர் மாத ஆதரவுத் தொகையோடு சேர்த்துக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் ஊழியர், பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



**"...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".** –இயேசு (மத்தேயு 25:40)

**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ்-ஐ வரவேற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**

# தமிழகத்தில் நடைபெற்ற இதர ஊழியங்கள்

**ஞாயிறு ஆராதனை – 20.09.2015, சங்கரன் கோவில்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 20.09.2015 அன்று சங்கரன் கோவில், CSI St. Paul's திருச்சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் கலந்து கொண்டு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு, தேவ செய்தியளித்தார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. கிங்ஸ்லி ஜெபக்குமார்** சபை உபதேசியார் **சகோ. மனோஜ்** ஆகியோருக்காகவும் சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 20.09.2015, கீழ சிவந்திபுரம்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 20.09.2015 அன்று கீழ சிவந்திபுரம், CSI St. Paul's திருச்சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் **சகோ. ஜாண்** அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள். மேலும் **சகோ. டேவிட்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்துக் கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் அவர்களுக்காகவும், சபை செயலாளர் **சகோ. ராஜசேகர்** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஷாலோம் சென்னை அலுவலக ஊழியர் கூடுகை – 24.09.2015, சென்னை**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 24.09.2015 அன்று சென்னை கிளை அலுவலகத்தில் வைத்து சென்னை கிளை அலுவலக ஊழியர்கள் மற்றும் சென்னை வட்டார ஊழியர்கள் சிறப்புக் கூடுகை நடைபெற்றது. இதில் நமது **பேராயர் வே. தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு ஆசீர்வதித்து ஜெபித்தார்கள். மேலும் ஊழிய முன்னேற்றப் பணிகளைக் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**ஞாயிறு ஆராதனை – 27.09.2015, திருநெல்வேலி டவுண்**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 27.09.2015 அன்று திருநெல்வேலி டவுண், CSI திருச்சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் **சகோ. டேவிட்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் அவர்களுக்காவும், சபை உபதேசியார் **சகோ. பீட்டர் பொன்னையா** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஜெபக்கூடுகை – 01.10.2015, நாகர்கோவில் ஸ்காட் கல்லூரி**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 01.10.2015 அன்று நாகர்கோவில் ஸ்காட் கல்லூரியில் நடைபெற்ற ஜெபக்கூடுகையில் **சகோ. ராபின்சன்** அவர்கள் கலந்துக் கொண்டு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு, தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய **சகோ. அல்பர்ட்** அவர்களுக்காகவும் **சகோதரி. ரஹில்** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

# ஞாபகப்படுத்துகிறோம்

*(கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக)*



***அன்பான உண்டியல் ஆதரவாளர்களே....***

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! **கிறிஸ்துமஸ் பண்டிகை** தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு **உங்களின் தெளிவான முகவரியுடன், உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் ***9698944522*** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## Yôd Ï jRjR ETYôN ù_Td áÓûL

நாள் : **02.11.2015 (திங்கள் கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.*** **கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

# ù_Td Ï ± l×Ls...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

- ◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

- ◎ 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 313க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- ◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- ◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.
- ◎ வெள்ளிதோறும் நடைபெறும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

- ◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.
- ◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் **Zion Kryston** க்காகவும், M.A. (Media) பயின்று வரும் **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.
- ◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் **சகோதரி ஷெக்கினா** அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

- ◎ 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
- ◎ பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Project மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

# ஷாலோம் மூப்பர்கள் கூடுகை -2015

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் குஜராத் மற்றும் மத்தியப்பிரதேசத்திலுள்ள நமது ஷாலோம் சபைகளின் மூப்பர்களுக்கென்று விசேஷ முகாம் நடத்தப்பட்டது. குஜராத் மூப்பர்களுக்கென்று செப்டம்பர் 22 &23–ம் தேதியும், மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா, முன்டத், ஹரிநகர், சோக்வாடா, பிட்டோல், டிக்கிடி, ஜாம்புகேடா பகுதியிலுள்ள சபை மூப்பர்களுக்கென்று 28&29–ம் தேதியும் மெஹம்தாபாத் நகரத்தில் வைத்து நடைபெற்றது. மேலும் அக்டோபர் 7–ம் தேதி மத்தியப்பிரதேசத்திலுள்ள சஜேலி மற்றும் நகாரி பகுதியிலுள்ள சபை மூப்பர்களுக்கென்று அந்தர்வேலியா சபையில் வைத்து நடைபெற்றது.

மேலும் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள சாகுவா, சிமல்கேடா பகுதியிலுள்ள சபை மூப்பர்களுக்கென்று 8–ம் தேதியும், தாட்கா, காரியா, கடி, சரக்கணி பகுதியிலுள்ள சபை மூப்பர்களுக்கென்று 9–ம் தேதியும் செவனியாவில் வைத்து நடைபெற்றது. கோய்கா பகுதியிலுள்ள சபை மூப்பர்களுக்கென்று 10–ம் தேதியன்று கோய்கா ஷாலோம் சபையில் வைத்து நடைபெற்றது. இம்முகாம்கள் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. துதி ஆராதனை வேளையில் அனைவரும் உற்சாகமாய் ஆடிப்பாடி துதித்து மகிழ்ந்தார்கள். பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையுள்ள பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து **பேராயர். தேவதாஸ்** அவர்கள் பவுலின் ஊழியத்தைக் குறித்து தேவ செய்தியளித்தார்கள். அனைவரும் செய்தியின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டு, ஜெப வேளையில் பவுலைப் போல ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்தார்கள்.

பின்பு தேநீர் இடைவேளைக்கு பிறகு **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் **“இயேசுவிலிருந்த வல்லமை”** என்ற தலைப்பில் தேவ செய்தியளித்தார்கள். அனைவரும் வாஞ்சையோடு தேவ செய்தியைக் கேட்டனர். ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடு அனைவரையும் நிரப்பினார். அனைவரும் ஆவியில் வல்லமை பெற்றார்கள். அத்துடன் முதல் நாள் கூட்டம் முடிந்தது. மறுநாள் ஜெபம் மற்றும் துதி ஆராதனையுடன் தொடங்கியது. அதன் பின் பேராயர்.தேவதாஸ் அவர்கள் ஷாலோம் திருமண்டலத்தின் காரியங்களையும் சபையின் ஒழுங்குகள் மற்றும் பொறுப்பை பற்றியும் பகிர்ந்து கொண்டார்கள். அதைத் தொடர்ந்து முழு பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும் வெள்ளி விழா ஆண்டின் திட்டங்களுக்காகவும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் **“ஜெபம்”** என்ற தலைப்பில் தேவ செய்தியளித்தார்கள். செய்தியின் முடிவில் ஜெப வேளையின் போது அனைவரும் ஜெப ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். பின்பு கர்த்தருடைய பரிசுத்த திருவிருந்து நடைபெற்றது.

கலந்து கொண்ட அனைவரும் கல்வாரியில் இயேசு நமக்காக சிந்தின இரத்தத்தையும் அவருடைய பாடுகளையும் நினைவு கூர்ந்து பயபக்தியுடன் பெற்றுக்கொண்டார்கள். ஜெபத்துடனும் பேராயர் அவர்கள் ஆசீர்வாத வசனத்தைக் கூற இனிதே நிறைவடைந்தது. சுமார் 2800 மூப்பர்கள் பங்கு பெற்று தேவ வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றார்கள். இம்முகாம்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு மற்றும் தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டது. அனைத்து கூடுகைகளும் ஆசீர்வாதமாக இருந்தது. **தேவனுக்கே மகிமை!**

# 600 ஷாலோம் சபைகளின் மூப்பர்களுக்கான முகாம்கள்





பாடல் மற்றும் ஆராதனை வேளை



அபிஷேக வேளை



தேவ செய்தியளிக்கும் பேராயர். தேவதாஸ் அவர்கள்



தேவ செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கும் மூப்பர்கள்



திருவிருந்து ஆராதனை





திரளாய் கூடியிருந்த மூப்பர்கள்

# ஷாலோம் மிஷன் ஞாயிறு - 04,11,18-அக்டோபர் -2015

குஜராத்


கங்கேலா கிராம சபை – குஜராத்


ஜெரி கிராம சபை – குஜராத்


நகரேலா கிராம சபை – குஜராத்

மத்தியப்பிரதேசம்


பிடோல் கிராம சபை – ம.பி.


அந்தர்வேலியா கிராம சபை – ம.பி


கேடி கிராம சபை – ம.பி

இராஜஸ்தான்


பிலடி – இராஜ்.


பாட்லா கல்வாணி – இராஜ்.


கதேடியா – இராஜ்.

# ஷாலோம் மிஷன் ஞாயிறு - 2015

கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படி கடந்த அக்டோபர் மாதம் நமது குஜராத், மத்தியப்–பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஷாலோம் சபைகளில் மிஷன் ஞாயிறு கொண்டாடப்பட்டது. குறிப்பாக ஷாலோம் ஊழியத்தின் 25–வது வருடத்தில்அனைத்து ஷாலோம் போதகர்களும், சுதேச ஊழியர்களும், மூப்பர்களும், விசுவாசிகளும் உற்சாகமாய் தேவனுக்கென்று காணிக்கை கொடுத்துள்ளார்கள்.

04.11.2015 ஞாயிறு குஜராத் மிஷன் ஞாயிறு அன்று **பேராயர். தேவதாஸ்** அவர்கள் போர்கேடா மற்றும் கங்கேலா ஆலயத்தில் தேவ செய்தியளித்தார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெரி சபையில் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள். **சகோ. டைட்டஸ்** அவர்கள் தெல்சா் ஆலயத்தில் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள்.

11.10.2015 ஞாயிறு மத்தியப்பிரதேசத்திலுள்ள அனைத்து ஷாலோம் சபைகளிலும் மிஷன் ஞாயிறு கொண்டாடப்பட்டது. பேராயர் அவர்கள் தலயா மற்றும் ஒஸ்கா சபையிலும், **சகோ. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பிட்டோல் சபையிலும், **சகோ. டைட்டஸ்** அவர்கள் அந்தர்வேலியா சபையிலும் கலந்துகொண்டு தேவசெய்தியளித்தார்கள். 18.10.2015 ஞாயிறு இராஜஸ்தான் சபைகளில் ஷாலோம் மிஷன் ஞாயிறு அனுசரிக்கப்பட்டது. **பேராயர். தேவதாஸ்** அவர்கள் பிலடி, தாட்கா மற்றும் பிச்சாவாடா சபைகளிலும், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பாட்லா சபையிலும், **சகோ. டைட்டஸ்** அவர்கள் கதேடியா சபையிலும் கலந்துகொண்டு தேவசெய்தியளித்தார்கள். மேலும் அனைத்து பணித்தள அலுவலக ஊழியர்களும் மூன்று மாநிலங்களிலுமுள்ள ஷாலோம் சபைகளில் நடைபெற்ற மிஷன் ஞாயிறு ஆராதனைகளில் பங்கு பெற்று தேவ செய்தியளித்தார்கள்.

05.10.2015 திங்கள் குஜராத், 12.10.2015 திங்கள் மத்தியப்பிரதேசம், 19.10.2015 திங்கள் இராஜஸ்தான் ஊழியர் கூடுகைகளில் அனைத்து ஷாலோம் சபைகளில் விசுவாசிகள் உற்சாகமாய் கொடுத்த காணிக்கைகளை, ஊழியர்கள் மூப்பர்களோடு இணைந்துவந்து கொடுக்க, அவற்றை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பமாக ஜெபித்து, ஆசீர்வதித்தார்கள். தங்கள் சொந்த ஜனங்கள் இரட்சிக்கப்படவும், பீல் ஆதிவாசி ஜனங்கள் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் ஊழியர்கள் எழும்பவும், சபைகள் ஸ்தாபிக்கப்படவும் அனைத்து பீல் விசுவாசிகளும் உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தேவனுக்கென்று இதுவரை சுமார் **ரூ. 30 இலட்சங்கள்** கொடுத்தார்கள். இந்த ஆண்டு ஷாலோம் மிஷன் ஞாயிறு கொண்டாட அநுக்கிரகம் பாராட்டின தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள்!

**"... சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்,**
**பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". 2 கொரி. 9:6**



# GÝkÕ LhÓúYôm YôÚeLs

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 620 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 303 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. **தேவனுக்கே மகிமை!**

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள், 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



## பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில

  

## 2015 BmYÚPj§p 100 ¡WôU BXVeLû [dLh¥GÝlT

- ✞ ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)
- ✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.

☞ உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.

☞ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

---

ì . 2 CXhNeLs Ut ßm ì . 1 CXhNm ùLôÓdLd á¥V BRWYô [ oLÞd Ï
R ² ¡WôU BXVm ùLôÓdLlThÓ, BXV ©W§ x û P **DVD** Ut ßm ×ûLlTPeLs,
A±dû L B ¡ V ] A à l© û YdLlTÓm. Ut \ ¨§Vô [ oLÞd Ï
C û Q kÕ LhPlThP BXVj § u TPeLs, **DVD** Ut ßm A±dû LLs A à l© û YdLlTÓm.

---

¨§ ER® A à l×m úTôÕ ***Sharing Love Mission*** Gu \ ùTVÚd Ï
**(Tuticorin Branch) D.D. or Cheque** GÓj Õ 100 ¡WôU B XV LhÓUô ] l T ¦ dLô ]
£\ l× ¨§ Gu ß Ï ± l©hÓ A à l© û YdLXôm. úUÛm GeLs AÛYXLm,
Øuú ] t \ l T ¦ Vô [ oLs, ©W§ ¨§L ° Pm ùLôÓ j ÕWº ûR l ùT t ßdùLôs Þ eLs.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009** (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373** (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | **613901112799** (IFS Code: ICIC0006139) |

## தூய பவுல் தமிழ் ஆலயம் (பைக்குலா, மும்பை) சபையாரின் பணித்தள வருகை சிறப்பு அறிக்கை

தேவ கிருபையாலும், அதிகமான ஜெபத்துடன், பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின்படி எங்கள் சபை மூலமாக வட இந்தியாவில் தேவையுள்ள மிஷனெரி பணித்தளத்தில் ஆலயம் ஒன்று கட்டி கொடுக்க தீர்மானித்தோம். **சகோ. P. ஜெயச்சந்திரன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களை அறிமுகம் செய்ய அவர்களும் **சகோ. ராஜேஷ்** அவர்களும் இணைந்துச் சென்று மத்தியப்பிரதேசம் ஷாலோம் பணித்தளத்தில் சாலக்கியா கிராமத்தைப் பார்த்து விசுவாசிகள், மூப்பர்கள், ஊழியரை சந்தித்து ஜெபித்து ஆலயம் கட்ட தெரிந்தெடுத்தார்கள்.

தேவகிருபையால் 60 x 25 அளவில் நேர்த்தியாக கான்கிரீட் போடப்பட்ட சாலக்கியா கிராம ஆலயம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நாங்கள் சபையாக 30 பேர்கள் சபை போதகர் **Rev. P. வில்லியம் ஜேம்ஸ்** தலைமையில் சென்று 26.09.2015 சனிக்கிழமை அன்று பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். குடிகாரர்கள், திருடர்கள், மந்திரவாதிகள் நிறைந்த மலை குன்றுகள் நிறைந்த அந்த சாலக்கியா கிராமத்தில் 85 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளாய் இருப்பது ஆச்சரியமாக இருந்தது.

சபை போதகர் **Rev. P. வில்லியம் ஜேம்ஸ்** அவர்கள் ஜெபிக்க **சகோ. G.S. கிருபாகரன்**, செயலாளர் அவர்கள் ஆலயத்தை திறந்து வைத்தார்கள். பீல் விசுவாசிகள் நடனம் ஆடி பாடல்கள் பாடியது தேவபிரசன்னத்தில் நிறைந்து ஆராதிப்பது, கண்ணீருடன் அர்ப்பணிப்பது பாரம்பரிய கிறிஸ்தவர்களாகிய எங்கள் யாவருக்கும் சவாலாக அமைந்தது. எங்களுக்கு கொடுத்த கலாச்சார வரவேற்பு எங்களால் மறக்கவே முடியாது. வாழ்த்துரைகளை நாங்கள் வழங்கி, சிறப்பு ஹிந்தி பாடல் பாடினோம். 100 வேத புத்தகங்களை வழங்கவும் தேவன் கிருபை தந்தார். **சகோ. ஜெயச்சந்திரன்** அவர்கள் சிறப்பு தேவ செய்தி வழங்கினார்கள்.

விசுவாசிகள் உற்சாகமாய் காணிக்கைகளை வழங்கி, குறிப்பாக ஆலயத்திற்காக 10 ஃபேன்களை வாங்கிக் கொடுத்தது ஆச்சரியமாக இருந்தது. நாங்கள் அனைவரும் சிறப்பு பாடல் பாடி தேவனை மகிமைப்படுத்தினோம். ஏழை விசுவாசிகள் ஆனால் இயேசுவை அதிகம் நேசிப்பவர்கள், எளிமையாக வயல்வெளிகளில் அமர்ந்து அன்பின் விருந்து உண்டு மகிழ்ந்தார்கள். இந்த கிராம ஆலயத்தை கட்டி முடிக்க **தூய பவுல் தமிழ் ஆலயம், பைக்குலா மும்பை** மூலமாக இதுவரை **ரூ. 5 இலட்சங்கள்** வழங்கப்பட்டது. தேவனுக்கே மகிமை.

**பேராயர் தேவதாஸ்** அவர்கள் குடும்பத்திற்கு தேவன் தந்த பரமதரிசனத்தின்படி முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தில் எங்களுக்கு தேவன் தந்த வாய்ப்பிற்காக தேவனை துதிக்கிறோம். இதை வாசிக்கும் அன்பானவர்களே நீங்களும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, சபையின் சார்பிலோ, ஆலயங்களை கட்டி கொடுக்க முன் வாருங்கள். நல்ல நிலத்தில் விதைத்தோம் என்ற சந்தோஷம் எங்கள் சபைக்கு பூரணமாய் ஏற்பட்டது. **தேவனுக்கே மகிமை!**

# தூய பவுல் தமிழ் ஆலயம் (பைக்குலா, மும்பை) சபையாரின் பணித்தள வருகை



சாளக்கியா, ம.பி. கிராம ஆலயப் பிரதிஷ்டை



பாடல் வேளை



உற்றாகமாய் தேவனைத் துதிக்கும் சபை மக்கள்



கூடியிருந்த சாலக்கியா சபை விசுவாசிகள்



சிறப்பு ஜெபம் – சகோதரி வஹிதா தேவதாஸ்



சிறப்பு பாடல் – St. Paul's Tamil Church சபை குழுவினர்



தேவ செய்தியளிக்கும் சகோ. ஜெயச்சந்திரன் அவர்கள்



கலாச்சார வரவேற்பு



அன்பின் ஐக்கிய விருந்து



# ஷாலோம் கிராம ஆலயம்

# சாலக்கியா

## மத்தியப்பிரதேசம்

சாலக்கியா என்ற கிராமம் மத்தியபிரதேச மாநிலம் ஜாபுவா மாவட்டம், ஜாபுவா தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் வாழும் மக்கள் இயேசுவை அறியாமல் எல்லா பாவங்களுக்கும் அடிமைப்பட்டு, அசுத்த ஆவிகளை வணங்கி, மந்திர பூஜைகளை செய்து, ஆடு மற்றும் கோழிகளை பலி செலுத்தும் வழக்கமுடையவர்கள். போதகர்.மங்கல்சிங் வசுனியா அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவருக்கு 24 மணி நேரமும் தலைவ இருந்து கொண்டே இருக்கும். மேலும் இவருடைய வயிற்றில் கட்டி இருந்தது.

சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர் வில்சன் சங்காடா அவர்கள் கோயாதரியா கிராமத்தில் நடத்திய கூட்டத்தில் மங்கல்சிங் வசுனியா கலந்து கொண்டார். அங்கு ஊழியர் இயேசுவைப் பற்றிக் கூறி, இவருக்காக ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து கோயாதரியாவில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கு பெற்று, விசுவாசத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, தனது சொந்த கிராமமாகிய சாலக்கியாவில் 2007–ம் வருடம் 5 குடும்பங்களுடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார்.

ஆரம்ப நாட்களில் பல்வேறு எதிர்ப்புகள் இருந்தது. ஆனாலும் சோர்ந்து போகாமல் விசுவாசத்தோடு ஜெபித்ததில் தேவன் சூழ்நிலைகளை மாற்றி போட்டார். கூட்டத்திற்கு வந்த பதா பாய் என்ற சகோதரர் வயிற்றில் எரிச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டார். மேலும் பதா பாய் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் இல்லாமலிருந்தது.

ஊழியர். மங்கல்சிங் வசுனியா அவர்கள் ஜெபித்ததில் தேவன் பதா பாய்க்கு சுகத்தைக் கொடுத்தார். மேலும் அவர்களுக்கு குழந்தையும் தேவன் அருளினார். அந்த அற்புதத்தின் மூலம் அநேக ஆத்துமாக்கள் சபைக்கு வர ஆரம்பித்தார்கள். தற்போது 60 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, சபையில் ஆராதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஊழியர் மங்கல்சிங் வசுனியா அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் **பரி. பவுல் தமிழ் ஆலயம் (பைக்குலா)** சபையின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக பேராயர். தேவதாஸ் அவர்கள் தலைமையில் பரி. பவுல் தமிழ் சபை போதகர் **Rev. P. வில்லியம் ஜேம்ஸ்** அவர்கள் ஜெபிக்க சகோ. **G.S. கிருபாகரன்** (செயலாளர்) அவர்கள் மூலம் 26–09–2015 சனிக்கிழமை அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்
இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க
முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

## ஷாலோம் கிராம ஆலயம்

# சிங்காடாக்கி கட்லி

### இராஜஸ்தான்



சிங்காடாக்கிகட்லி என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் சாராயம், போதைப் பழக்கங்களுக்கு அடிமைகளாகவும், சண்டை போடும் பழக்கமுடையவர்கள். ஊழியர். சுனில் கணாவா அவர்கள் இயேசுவை அறியாத போது சாரயம் காய்ச்சி விற்பதைத் தனது தொழிலாக கொண்டிருந்தவர். இவரும் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவருடைய தகப்பனார் 3 வருடமாக ஆஸ்துமா வியாதியினால் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டார்.

சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர். கல்லு டின்டோடு அவர்கள் இவருக்கு இயேசுவைப் பற்றிக் கூறி, இவருடைய தகப்பனாருக்காக ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை குடும்பமாக சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து ஷாலோம் தாட்கா சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டு மென்ற பாரம் ஏற்பட்டு, தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, ஊழியம் செய்ய ஆரம்பித்தார்.

தனது சொந்த கிராமத்தில் 2009–ம் ஆண்டு 2 குடும்பங்களுடன் சபை நடத்த தொடங்கினார். ஆரம்ப நாட்களில் கூட்டம் நடத்துவதற்கு பல எதிர்ப்புகள் நேர்ந்தது. ஆனாலும் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருந்து, உபவாசத்துடன் ஜெபித்ததில் தேவன் எதிர்ப்புகளை மாற்றினார். பின்பு அநேகர் சபைக்கு வர ஆரம்பித்தார்கள். தற்போது 25 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, ஆராதித்து வருகிறார்கள்.

தற்போது ஊழியர். சுனில் கணாவா அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் ஆலயம் கட்டப்பட்டு, 03–10–2015 அன்று தேவ நாம மகிமைக்காக பேராயர். தேவதாஸ் அவர்கள் ஜெபிக்க, சகோ. சாலமோன் ஜெபக்குமார் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் நாசரேத்தைச் சேர்ந்த **சகோ. சாலமோன் ஜெபக்குமார்** (Rtd. Manager TMB) அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது. தேவனுக்கே மகிமை!

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்**
**இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க**
**முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# சகோ. சாலமோன் ஜெபக்குமார் Rtd. Manager - TMB (நாசரேத்) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு


சிறப்பு பாடல் & பகிர்வு வேளை – சகோ. ஜெபஸ்டன்


கட்லி (இராஜஸ்தான்) கிராம ஆலயப் பிரதிஷ்டை


தேவ செய்தியளிக்கும் சகோ. சாலமோன் அவர்கள்


வாழ்த்துரை – சகோதரி ஜெபக்கனி பூரணம்


தேவ செய்தியை கேட்கும் கட்லி சபை விசுவாசிகள்


பீல் ஆதிவாசி ஜனங்களுக்காக கொடுக்கப்பட்ட வேதாகமங்களுடன்


அன்பின் விருந்து


ஹிரோலா (குஜராத்) கிராம ஆலயத்திற்கு முன்பு



## பணித்தளத்திற்கு சென்ற சகோ. சாலமோன் ஜெபக்குமார் (Rtd.T.M.B. Manager, Nazareth) அவர்களோடு.....

♦ **Praise the Lord! Bro. சாலமோன் ஜெபக்குமார் அவர்களே, உங்களையும், உங்களுடைய குடும்பத்தையும் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல முடியுமா?**

Praise the Lord . நான் TMB –ல் கடவுளின் கிருபையினால் 33 வருடங்கள் வேலை செய்து கடைசியில் AGM ஆக பணி நிறைவு பெற்றேன். என்னுடைய மனைவி **ஜெபக்கனி பூரணம்** E.T. பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் P.G. Asst ஆக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள். என்னுடைய மூத்த மகன் **ஜெபகரனும்** மற்றும் மருமகள் **சஞ்சனாவும்** கடவுளின் பெரிதான கிருபையினால் USA–ல் இருக்கிறார்கள். என்னுடைய இரண்டாவது மகன் **ஜெபஸ்டன்** Infosys, Mysore–ல் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

♦ **ஷாலோம் ஊழியத்தைக் குறித்து நீங்கள் எப்போது, கேள்விப்பட்டீர்கள்? கூறுங்களேன்.**

நான் தூத்துக்குடி Regional Office – ல் வேலைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக தற்போது ஷாலோம் ஊழியத்தின் மேனேஜராக பணியாற்றும் சகோ. சாம் அவர்கள் மூலமாக இந்த ஊழியத்தைக் குறித்து கேள்விப்பட்டேன்.

♦ **ஷாலோம் ஊழியத்தை நீங்கள் எந்தெந்த விதத்தில் தாங்கி வருகிறீர்கள்?**

ஷாலோம் ஊழியத்தில் ஒவ்வொரு மாதமும் நாங்கள் 5 பீல் மிஷினெரிகளையும், மூன்று பீல் ஆதிவாசி சிறுவர்களையும் தாங்கி வருகிறோம். நாங்கள் கர்த்தரின் கிருபையால் ஒரு ஆலயமும் கட்டுவதற்கு உதவி செய்துள்ளோம்.

♦ **ஆலயம் கட்டுவதற்காக நீங்கள் வாஞ்சையோடு எப்போது? எந்த சூழ்நிலையில் காணிக்கை கொடுத்தீர்கள்?**

என்னுடைய இரண்டாவது மகன் **ஜெபஸ்டன்** மாதம் மாதம் தன்னுடைய சம்பளத்தில் ஒரு பகுதியை எடுத்து ஆலயம் கட்டுவதற்காக சேர்த்து வைத்து கொடுத்தான்., அதிலிருந்து நாங்கள் ஆலயம் கட்ட காணிக்கையாக கொடுத்தோம்.

♦ **குஜராத் பணித்தளத்திற்கு அக்டோபர் மாத தொடக்கத்தில் சென்றிருந்தீர்கள். அந்த பிரயாண அனுபவத்தை கொஞ்சம் சொல்லுங்களேன்? உங்களோடு யாரெல்லாம் வந்தார்கள்?**

நாங்கள் போகும் போது 2 நாட்கள் இரயிலில் சென்று பரோடா அடைந்தோம். அங்கிருந்து கார் மூலம் எங்களை தாகோத்திற்கு கூட்டிச் சென்றனர். தங்குவதற்கு ஒரு நல்ல விடுதியை ஏற்பாடு செய்து தந்தார்கள். பணித்தளத்தை பார்வையிட ஒரு ஜீப் மற்றும் **சகோ. சாமுவேல்–**ஐயும் ஒழுங்கு பண்ணியிருந்தார்கள். ஆகையால் பிரயாணத்தில் எங்களுக்கு எந்தவித கஷ்டம் இல்லாமல் வசதியாக இருந்தது. எனது மனைவியும் என்னுடைய இரண்டாவது மகனும் வந்தார்கள்.

- **பணித்தளங்களில் இருந்த நாட்களில் உங்களுடைய அனுபவத்தைப் பற்றி கூற முடியுமா?**

  கர்த்தர் இந்த ஒரு கூட்ட பீல் மக்களை தெரிந்து கொண்டார். அவர்கள் ஷாலோம் ஊழியத்தின் மூலம் இயேசுவை அறிந்து கொண்டார்கள் என்பதை அறிந்து கொண்டோம். அவர்களைப் பார்க்கும் போது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

- **ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் பீல் ஆதிவாசி விசுவாசிகளை குறித்ததான உங்கள் கருத்து என்ன?**

  எங்கள் குடும்பத்தின் சார்பாக கொடுக்கப்பட்ட காணிக்கையின் மூலமாக கட்டப்பட்டுள்ள இராஜஸ்தானில் உள்ள ஹாட்லி கிராம ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் பீல் ஆதிவாசி விசுவாசிகள் ஆவியில் நிரம்பி கர்த்தரை உண்மையோடு தொழுது கொண்டனர். உற்சாகமாக ஆடிப்பாடி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

- **பணித்தளத்தில் நீங்கள் வேறெந்த கிராமங்களுக்கெல்லாம் சென்றீர்கள் அங்குள்ள அனுபவத்தைப் பற்றி கூறுங்களேன்?**

  குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பணித்தளங்களை பார்வையிட்டோம். அங்குள்ள மக்கள் எங்களை அன்போடு வரவேற்றார்கள். Compassion மூலம் நடத்தப்படும் சிறுவர் ஊழியம், கல்வி நிறுவனங்கள் இவைகளை பார்வையிட்டோம். இராஜஸ்தானில் நடத்தப்பட்ட வாலிப பெண்கள் முகாமை பார்வையிட்டோம். அவர்கள் எல்லோரும் ஆவியில் நிறைந்து ஆடிப்பாடி கர்த்தரை தொழுது கொண்டனர்.

- **பிஷப். தேவதாஸ் மற்றும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களோடு இருந்த நாட்கள் உங்களுக்கு எவ்வாறு இருந்தது?**

  **பிஷப். தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் எங்களை அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். அவர்களுடைய சாட்சிகளை எங்களோடு பகிர்ந்துக் கொண்டார்கள். உண்மையிலேயே கர்த்தர் அவர்களோடிருந்து அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார் என்பதைஅறிந்து கொண்டோம் எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

- **இரட்சிக்கப்பட்ட பீல் மக்களுக்கும், இரட்சிக்கப்படாத பீல் மக்களுக்கும் இடையில் இருந்த வித்தியாசத்தை கூற முடியுமா?**

  இரட்சிக்கப்பட்ட பீல் மக்கள் சுத்தமாகவும், ஒழுங்காகவும் உடை அணிந்திருக்கிறார்கள். அவர்கள் நன்கு சமைத்து சாப்பிட கற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களுடைய பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி கல்வி கற்க வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய முகங்கள் பிரகாசமாக இருந்ததை காண முடிந்தது.

- **பீல் ஆதிவாசி கிராம மக்கள் மத்தியில் வசதிகள் எப்படி காணப்பட்டது?**

இன்னும் சரியான போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஒடு வீடுகளில் தான் வசிக்கிறார்கள். சில வீடுகளில் அவர்களுடன் மாடுகளையும் ஒரு பகுதியில் வைத்துள்ளனர்.

- **ஷாலோம் ஊழியத்திற்கு நீங்கள் காணிக்கை கொடுப்பதினால் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களும், அற்புதங்களும் என்னவென்பதை சொல்லுங்களேன்.?**

நான் எந்தவித பிரச்சனையும் இல்லாமல் பணி நிறைவு பெற கர்த்தர் கிருபை செய்தார். எங்களுடைய தேவைகளை ஆச்சரியமாக சந்தித்து வருகிறார். நாங்கள் காணிக்கை கொடுப்பதினால் எங்களுக்கு எந்த குறைவும் இல்லை. அனைவரையும் பாதுகாத்து வருகிறார்.

- **பணித்தளத்தை பார்வையிட்ட பின்பு உங்களுடைய இருதயத்தின் வாஞ்சைகளும், உணர்வுகளும் எப்படி இருந்தது, அதை சற்று விரிவாக கூறுங்களேன்.**

**பிஷப். தேவதாஸ்** ஐயாவையும், அம்மாவையும் கர்த்தர் தெரிந்து கொண்டு இந்த ஊழியத்தை நடத்தி வருகிறார் என்பதை தெரிந்து கொண்டோம். கர்த்தர், இந்த பீல் மக்களை தெரிந்து கொண்டார். நிறைய அற்புதங்கள் இவர்கள் மத்தியில் நடக்கின்றன. இந்த ஊழியம் கர்த்தரின் கிருபையால் மிகவும் ஆசீர்வாதமாக நடந்து வருகிறது. அதைப் பார்க்கும் போது மிகவும் சந்தோஷமாக இருந்தது. இயேசுவுக்கு மிகவும் நன்றி செலுத்தினோம். இதற்காக நாங்கள் அதிகமாக ஜெபிக்கவும் கொடுக்கவும் மற்றவர்களுக்கு இந்த ஊழியத்தைப் பற்றி அறிவிக்கவும் எண்ணி தீர்மானம் செய்துள்ளோம்.

- **இறுதியாக நம் ஷாலோம் வாசகர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் கருத்து என்ன?**

ஷாலோம் ஊழியம் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியம். 25 வருடங்களாக இந்த ஊழியம் வளர்ந்து வருகிறது. பீல் ஆதிவாசி மக்களின் வாழ்க்கை தரமும் உயர்ந்துள்ளது. ஷாலோம் ஊழியம் சுவிசேஷப்பணியுடன் கல்விப்பணியும் செய்து வருகிறது. எனவே, இந்த ஊழியத்திற்கு ஜெபிக்கும், தாங்கும் மக்களை கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதிப்பார். இன்னும் ஜெபியுங்கள், தாங்குங்கள் இதுவரை தாங்காதவர்கள் மிஷனெரியை தாங்கலாம், குழந்தைகளை தாங்கலாம், ஆலயங்களை கட்டிக் கொடுக்கலாம். உங்கள் பிள்ளைகளை ஊழியங்களை தாங்குவதற்கு உற்சாகப்படுத்துங்கள். கர்த்தர் ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களை சந்தித்து தேசத்தில் பெரிய காரியங்களை செய்வாராக.

**இவ்வளவு நேரம் நீங்கள் உங்கள் பணித்தள அனுபவத்தை எங்களிடம் பகிர்ந்து கொண்டதற்காக உங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை கூறுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**



# ஷாலோம் வாலிபர் முகாம் - 2015

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள நமது ஷாலோம் சபைகளில் உள்ள வாலிப ஆண்கள் மற்றும் பெண்களுக்கென்று விசேஷ முகாம்கள் நடத்தப்பட்டது. குஜராத் வாலிபர்களுக்கென்று செப்டம்பர் 12–ம் தேதி மற்றும் 13–ம் தேதியும், சோட்டா உதய்ப்பூர் பகுதி வாலிபர்களுக்கென்று அக்டோபர் 15–ம் தேதியும் நடைபெற்றது.

மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்று செப்டம்பர் மாதம் 19–ம் தேதி மற்றும் 20–ம் தேதியும் நடைபெற்றது. டிக்கிடி பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்று 26–ம் தேதி மற்றும் 27–ம் தேதியும் நடைபெற்றது. இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள கோய்கா பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்று அக்டோபர் 2–ம் தேதி மற்றும் 3–ம் தேதியும், செவனியா பகுதியிலுள்ள வாலிபர்களுக்கென்று அக்டோபர் 10–ம் தேதி மற்றும் 17–ம் தேதியும் நடைபெற்றது. இம்முகாம்கள் **“மாதிரியாயிரு”** என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.

இம்முகாம்கள் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து துதி ஆராதனை வேளையை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் **சகோ. ஃப்ராங்க்ளின் பென்னட்** அவர்களால் நடத்தப்பட்டது. கலந்துக் கொண்ட வாலிபர்கள் அனைவரும் உற்சாகமாய் ஆடிப்பாடி தேவனைத் துதித்து மகிழ்ந்தார்கள். ஆராதனையில் தேவப்பிரசன்னம் அளவில்லாமல் இறங்கியது. அதைத் தொடர்ந்து **“மாதிரியாயிரு”** என்ற தலைப்பில் குறு நாடகம் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டது. இந்த நாடகம் மூலம் வாலிபர்கள் தொடப்பட்டார்கள்.

அதைத் தொடர்ந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 1 தீமோத்தேயு 4:12 என்ற வசனத்தின் அடிப்படையில் அன்பிலும், நடக்கையிலும், வார்த்தையிலும், பரிசுத்தத்திலும், விசுவாசத்திலும், ஆவியிலும் மாதிரியாயிரு என்று தேவ செய்தியை வல்லமையோடு அளித்தார்கள்.

செய்தியைக் கேட்ட வாலிபர்கள் ஜெப வேளையில், மனந்திரும்பி அழுது தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள், மேலும் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், பிசாசின்பிடியிலிருந்தும் விடுதலை பெற்று, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து மாதிரியான வாழ்க்கை எப்படி வாழ வேண்டுமென்பதைக் குறித்து, யோசேப்பின் வாழ்க்கை நாடகமாக நடித்து காண்பிக்கப்பட்டது. பின்பு கலந்து கொண்ட அனைத்து வாலிபர்களுக்கும், தனித்தனியே விசேஷ பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டது. இறுதியாக ஜெபத்துடன் நிறைவு பெற்றது. இம்முகாம்களில் மொத்தம் 2200 வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. **தேவனுக்கே மகிமையுண்டாவதாக!**

# ஷாலோம் வாலிபர் கூடுகைகள் - குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம்





பாடல் மற்றும் ஆராதனை வேளை



தேவ செய்தியளிக்கும் பேராயர். தேவதாஸ் அவர்கள்



தேவ செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



சகோ. டைட்டஸ் அவர்களின் பகிர்வு வேளை



குறு நாடகம்



வாலிபர்களுக்கான சிறப்பு ஜெபம்





திரளாய் கூடியிருந்த வாலிபர்கள்

# ஷாலோம் சபைகளின் பெண்களுக்கான சிறப்பு கூட்டங்கள்

## குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம்



சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுக்கு
கலாச்சார வரவேற்பு



ஆராதனை வேளை



தேவ செய்தியளிக்கும்
சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



பெண்களுக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது



சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்பட
கதறி ஜெபிக்கும் பீல் ஆதிவாசிப் பெண்கள்



கூடுகையில் தேவன் எழுப்பிய சாட்சி





கூடுகையில் திரளாய் பங்குபெற்ற பீல் ஆதிவாசி பெண்கள்

## ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை & கிளை அலுவலக முதலாம் ஆண்டு ஸ்தோத்திரக் கூடுகை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த அக்டோபர் மாதம் 11ம் தேதி ஞாயிறு நாகர்கோவில் ஈடன் ஹாலில் வைத்து, ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை & கிளை அலுவலக முதலாம் ஆண்டு ஸ்தோத்திரக் கூடுகை நடைபெற்றது. **சகோ. பிரைட்** அவர்கள் ஜெபித்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். பின்னர் **சகோ. செல்வதுரை** அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளையை ஏறெடுக்க, **சகோ. ஏசுதாஸ்** மற்றும் **சகோ. சுந்தர்ராஜ்** ஆகியோர் ஷாலோம் பணித்தளங்களைக் குறித்தக் காரியங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின்னர் **சகோ. கிங்பெர்ட்** அவர்கள் பணித்தள ஊழியங்களுக்காக ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அதன்பின்னர் **சகோதரி. ஜெயந்தா** அவர்கள் நாகர்கோவில் கிளை அலுவலகத்தைக் குறித்த சாட்சியைப் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் **சகோ. செல்வதுரை** அவர்கள் ஷாலோம் ஊழிய தேவைகளையும் திட்டங்களையும் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் **சகோதரி. டோனிமா** அவர்கள் காணிக்கை பாடல் பாட, காணிக்கைக்கான ஜெபத்தை **Pr. இஸ்ரேல்** அவர்கள் ஏறெடுக்க, **சகோதரி. ரமோலா S. பாபு** அவர்கள் தேவனுடைய செய்தியை வழங்கினார்கள். முடிவு ஜெபத்தையும் நன்றியுரையையும் **Rev. மேஷாக் வசந்த்** அவர்கள் ஏறெடுத்து கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

## ஷாலோம் பெண்கள் கூடுகை - 2015

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள நமது ஷாலோம் சபைகளில் உள்ள போதகர்களின் மனைவிமார்கள் மற்றும் மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷக் கூடுகைகள் நடைபெற்றது. செப்டம்பர் மாதம் 13–ம் தேதியன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள மசூரியா பகுதியிலுள்ள பெண்களுக்கான கூடுகை நடைபெற்றது. மேலும் இராஜஸ்தான் மாநிலத்தில் பேடவ் பகுதியிலுள்ள பெண்களுக்காக செப்டம்பர் 15–ம் தேதியும், 30–ம் தேதி கோய்கா பகுதியிலுள்ள பெண்களுக்காகவும், அக்டோபர் 6–ம் தேதி தாட்கா பகுதியிலுள்ள பெண்களுக்காகவும், அக்டோபர் 13–ம் தேதியன்று கடி பகுதியிலுள்ள பெண்களுக்காக ஷாலோம் மாஜியா ஆலயத்திலும் விசேஷக் கூடுகைகள் நடைபெற்றது. இக்கூடுகைகள் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

துதி ஆராதனை வேளையில் அனைவரும் ஆனந்தமாய் தேவனைப் பாடி கர்த்தருடைய பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டார்கள். தொடர்ந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் **“வல்லமை”** என்ற தலைப்பில் தேவ செய்தியளித்தார்கள். செய்தியின் முடிவில் ஜெப வேளையில் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நிரப்பப்பட்டார்கள். இக்கூடுகைகளில் அநேகர் வியாதியிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும், அற்புத சுகம் பெற்றார்கள். குறிப்பாக தாட்காவில் நடைபெற்ற கூட்டத்தில் பிலடி கிராமத்தைச் சேர்ந்த மேத்தா பேன் என்ற சகோதரிக்கு 5 வருடங்களாக கழுத்தில் கட்டி இருந்தது. ஜெப வேளையில் கட்டி மறைந்தது. தேவ ஆவியானவர் வல்லமையாக இக்கூட்டங்களில் அசைவாடினார். தேவனுக்கே மகிமை!

## ஷாலோம் ஜெப மையம் தொலைபேசி ஜெப ஊழியம்

தேவனுடைய கிருபையால் நமது ஷாலோம் ஜெப மையம் 01–09–2015 அன்று தொடங்கப்பட்டு ஜெப ஊழியம் நடைபெற்று வருகிறது. ஒரு நாளில் 4 பிரிவுகளாக பிரித்து 12 பேர் முழு நேரமாக இணைந்து ஜெபித்து வருகிறார்கள். தினமும் 2 ஊழியர் குடும்பங்கள் மற்றும் 2 சபையைச் சேர்ந்த மூப்பர்களும் குடும்பமாக இணைந்து ஜெபிக்கிறார்கள். மேலும் தொலைப்பேசியின் வாயிலாக அநேக ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் ஜெப உதவி பெற்று வருகிறார்கள். ஜெப மையத்தின் ஒருங்கிணைப்பாளர் **சகோ. யாக்குப் பாபோர்** மற்றும் நமது ஜெப வீரர்கள் தொலைபேசியில் ஜெப உதவிக்காக அழைப்பவர்களுக்கு தேவனிடத்தில் பாரத்துடன் ஜெபிக்கிறார்கள்.

ஒருநாள் இரவு கிராமத்திலிருந்து ஒரு தாயாரிடமிருந்து தொலைப்பேசியிலிருந்து அழைப்பு வந்தது. உடனே ஜெப வீரர் தொலைபேசியை எடுத்து, **“ஹலோ, ஷாலோம் ஜெப மையம்”** என்று சொன்னவுடனே, மறுபக்கத்தில் அந்த தாயார், **“ஹலோ, தமே யீசு பிரபு போலேச்சே கே சூ”** என்று கேட்டார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? **“ஹலோ, நீங்கள் இயேசு சுவாமியா பேசுகிறீர்கள்?”** என்று அர்த்தம். பாருங்கள் எவ்வளவு பெரிய விசுவாசம்? இப்படிப்பட்ட விசுவாசத்தின் மூலமாக தான் ஷாலோம் தொலைபேசி ஜெப ஊழியத்தின் மூலம் பல அற்புதங்களை தேவன் செய்து வருகிறார்.

**தொலைப்பேசி ஜெப ஊழியத்தின் மூலம் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் சில**

◎ பெயர் : **சேஜு கலால்** – கிராமம் : **பட்டார்** (இராஜஸ்தான்)

முழுக் குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்தது. உடல் முழுவதும் வலி மற்றும் அடிக்கடி மயக்கம் வரும். வேலை செய்யவே மனம் வராது. தொலைபேசியில் ஜெபித்த உடன் குடும்பத்தில் சமாதானம் வந்தது. சரீரத்தில் சுகம் கிடைத்தது. அல்லேலூயா!

◎ பெயர் : **வினோத் பாய்** – கிராமம் : **வகேலா** (குஜராத்)

நள்ளிரவு 12 மணிக்கு வீட்டில் பெரிய பாம்பு வந்தது. உடனடியாக ஜெப மையத்திற்கு தொலைபேசியில் அழைத்து ஜெபித்தார். உடனே பாம்பு வெளியே சென்று விட்டது.

◎ பெயர் : **பகதூர் டாமோர்** – கிராமம் : **போர்வானி** (ம.பி)

3 நாட்களாக கை–கால்களில் பயங்கர வலி இருந்தது. ஜெப மையத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்த போது பரிபூரண சுகம் கிடைத்தது.

◎ பெயர் : **அம்லா பாய்** – கிராமம் : **கௌசார்** (ம.பி)

எனக்கு வாந்தி மயக்கம் மற்றும் வயிற்றுப் போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டு, ஜெப மையத்தில் தொலைபேசியில் ஜெபித்த போது சுகம் பெற்றார்.

◎ பெயர் : **எஸ்தர் பேன்** – கிராமம் : **ரூண்டி** (குஜராத்)

பாம்பு கடித்து விட்டது. உடனே ஜெப மையத்தில் தொலைப்பேசியில் ஜெபித்த போது, உடனே சுகம் கிடைத்தது.

◎ பெயர் : **ராமா பேன் பபேரியா** – கிராமம் : **நானிகரஜ்** (குஜராத்)

10 நாட்களாக வியாதியினிமித்தம் கட்டில் படுக்கையாக இருந்தார். ஜெப மையத்தை தொடர்பு கொண்டு ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 27

**பதில் எழுதுக :**

(குறிப்பு : விடைகளை ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலிருந்து மட்டும் கண்டு பிடிக்கவும்)

1. பூமியைப் பார்க்கிலும், வானம் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படி எது உயர்ந்திருக்கிறது?
2. கர்த்தர் பெரு வெள்ளத்திற்கு தப்பும் எதுவாயிருப்பார்? வெயிலுக்கு ஒதுங்கும் எதுவாயிருப்பார்?
3. கூட்டை விட்டுத் துரத்தப்பட்டு அலைகிற குருவியைப் போல் இருப்பது யார்?
4. யார் கர்த்தருடைய தாசன்? யார் கர்த்தருடைய சிநேகிதன்?
5. மெத்தப் பெருமைக்காரன் யார்?
6. எவைகளை ஒருவரும் கண்டதில்லை?
7. யாருடைய கொழுத்த தேகம் மெலிந்து போம்?
8. இஸ்ரவேலின் பிடரி நரம்பு எப்படி இருக்கிறது? அவனது நெற்றி எப்படி இருக்கிறது?
9. யார் வெள்ளியை மதியாமலும், பொன்னின் மேல் பிரியப்படாமலும் இருப்பார்?
10. யார் எதுமட்டும் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.11.2015**

**கடந்த அக்டோபர் மாத வேத வினா போட்டி எண் 26க்கான சரியான விடைகள்**

1. கர்த்தரால். – சங். 37 : 39
2. என் அலைச்சல்கள். சங். 56 : 8
3. பணப்பிரியன். – பிர. 5 : 10
4. பிள்ளைகளுடைய சமாதானம். – ஏசா. 54 : 13
5. அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவன். எரே. 17 : 11
6. எப்ராயீமைக் கைவிடுவதும், இஸ்ரவேலை ஒப்புக் கொடுப்பதும். – ஓசி. 11 : 8
7. யோனா, மீன் வயிற்றிலிருந்து. – யோனா 2 : 1,3
8. ஏசாயா – 6 : 12
9. ஓர் இடத்தின் பெயர் –1 சாமு. 30 : 29
10. ஏசாவின் சந்ததியில் தோன்றிய ஒரு பிரபு – ஆதி. 36 : 40

**கடந்த அக்டோபர் மாத வேத வினாப் போட்டி எண் 26 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 28 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

1. **Sis.** ஜெபக்கனி, சங்கரன்கோவில். 2. **Bro.** வில்சன் தர்மராஜ், தேனி மாவட்டம். 3. **Sir.** ஆலிவ் ஜெயபாலன், கோவை

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## T ¦ jR[ j§p úRYu ùÑnR At×ReLÞdLôL úRYû ] j Õ§ÙeLs!

### குஜராத் மாநிலம்

**Pr. டெடு ரட்டுவா ஹர்பார்புரா**

ராலியாபாய் என்ற சகோதரன் ஒரு மாதமாக வயிற்றுப்போக்கினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.

சோகன்பாய் என்ற சகோதரனை பாம்பு கடித்துவிட்டது. இயேசுவின் நாமத்தில் இவருக்காக ஜெபித்தபோது தேவன் விஷம் ஏறாமல் ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. பாகா கட்டாரா பாவ்கா**

வர்ஷா என்ற சகோதரி அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு வந்தார். இவரை ஜெபிப்பதற்காக அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**Pr. ரெங்குலா ரட்டுவா சனடா**

ஜாக்லாபாய் என்ற சகோதரன் நெஞ்சு வலியினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு தேவனிடம் மன்றாடியபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. மன்னு மெய்டா நெல்சர்**

சர்தார்பாய் என்ற சகோதரன் சிறுநீரகம் பாதிப்படைந்து கஷ்டப்பட்டார். அநேக இடங்களில் மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லை. இறுதியாக இவருக்கு இயேசுவின் அன்பைக் கூறி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

### இராஜஸ்தான் மாநிலம்

**Pr. துலேஷவர் கராசியா ஹெய்ஜா மெகஜி**

மான்ஜிபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபேது, தேவன் இந்த சகோதரனுக்கு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலைக் கொடுத்தார்.

**Pr. லால்சிங் நினாமா சக்கர்வாடா**

தீபா என்ற சகோதரி 2 ஆண்டுகளாக வயிறு வலியினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் வயிற்று வலியிலிருந்து அற்புத சுகம் கொடுத்தார்.

**Pr. பாபுலால் மச்சார் ரூப்ஜிகூட்டா**

ஆஷா என்ற சகோதரி அநேக ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் வேதனைப்பட்டு வந்தார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபித்தபோது தேவன் குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டார்.

அர்ஜுன் என்ற சகோதரன் டி.பி. வியாதியினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் நோயிலிருந்து அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. வால்சிங் காடியார் வாகசை**

பீமா என்ற சகோதரன் மனநிலை சரியில்லாமல் இருந்தார். இவருக்காக ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்துவந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் மன நிலையை மாற்றி தெளிவான மனநிலையைக் கொடுத்தார்.

# T ¦ jR[ j§p úRYu ùNnR A t×ReLÞdLôL úRYû ] j Õ§ÙeLs!

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. மங்கல்சிங் முனியா பார்வாலியா**

கரன் என்ற சகோதரர் மூட்டு வலியினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. மத்தியாஸ் கர்வால் தெப்ரி**

பவர்சிஸ் என்ற சகோதரர் மனநிலை சரியில்லாதவராய் காணப்பட்டார். ஜெபிக்கும்படியாக இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துவந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாய் மனநிலையை சரிசெய்தார்.

**Pr. சந்து டாமோர் ஜாவாலியா**

நான்கி என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு வந்தார். இவரை ஜெபிக்கும்படியக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலைக் கொடுத்தார்.

பர்மிளா என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது தேவன் விஷம் ஏறாமல் ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. நான்சிங் சௌகான் தெல்வானி**

கேம்சந்த்பாய் என்ற சகோரன் டி.பி. வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். எவ்வளவோ மருந்து சாப்பிட்டும் நோய் குணமாகவில்லை. இறுதியாக ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. இன்டர்சிங் ஜாமார் அந்தர்சம்பா**

தினேஷ் என்ற சகோதரன் மஞ்சள் காமாலை நோயினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. அமர்சிங் ரட்டுவா பாட்கேடா**

பிங்கி என்ற சகோதரியின் வயிற்றில் இருந்த கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். அநேக மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லை. இறுதியாக ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக தேவனிடம் மன்றாடி ஜெபித்தபோது தேவன் அற்புதமாக கட்டியை நீக்கி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தும்லா காட் வால்பூர்**

ரேல்சிஸ் என்ற சகோதரனின் குடும்பம் மந்திர கிரியை செய்பவர்கள். இவர்களுக்கு திருமணமாகி 5 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. இவருக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை எடுத்துக் கூறி ஜெபித்தபோது தேவன் அற்புதமாக ஒரு ஆண் குழந்தையைக் கட்டளையிட்டார். தற்போது இவர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

**Pr. மங்கல்சிங் வாசுனியா சௌக்கியா**

பூஜா என்ற சகோதரி 10 வருடமாக அசுத்த ஆவியின் பிடியில் சிக்கி அலைக்கழிக்கப்பட்டு வந்தார். இவரை ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

*சிறுமைப்பட்டவர்களின் மேல்*
*சிந்தை கொண்ட பெண்மணி*

# பண்டிதை இராமாபாய்



**இராமாபாய்** தென்இந்தியாவில் மங்களூர் மாவட்டத்தில் ஒரு வைதீக பிராமண குடும்பத்தில் 1848ம் ஆண்டு தனது பெற்றோருக்கு கடைசி மகளாய் பிறந்தார். இவரது தந்தை புராணங்களை சமஸ்கிருதத்தில் ஓதுகிறவர், அவரது தாயாரும் சமஸ்கிருதத்தில் புராணங்களை வாசிப்பார். பக்தியுள்ள இந்துக்கள் அவர்களுக்கு பணமும் ஆகாரமும் தந்து ஆதரித்தனர். அவற்றை வைத்து வாழ்க்கை நடத்தினர்.

இந்த சூழ்நிலையில் தென் இந்தியாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. மிகவும் வறுமையான சூழ்நிலையில் ஒரு கிராமத்திலுள்ள கோயிலில் குடும்பத்தோடு தஞ்சம் புகுந்தார்கள். ஆனால் அந்தக் கோயில் பூஜாரி அவர்களை துரத்திவிட்டான். ஆகவே கிராமத்தின் ஒதுக்குப்புறத்திலுள்ள பாழடைந்த கோயிலில் போய் தங்கினர். அங்கு **இராமாபாயின்** தந்தை மரணம் அடைந்தார். சில மாதங்களில் அவருடைய தாயும் ஒரு சகோதரியும் மாண்டு போயினர். பின்னர் **இராமாபாயும்** அவரது அண்ணனும் கல்கத்தா நகருக்கு குடிபெயர்ந்தனர். அங்கு பிராமணர்களுக்கு புராணங்களைப் படித்துக் காட்டினர். அதனால் அங்கு அவர்களுக்கு பணமும் ஆதரவும் கிடைத்தன. இராமாபாய் அறிவுள்ள பெண்ணாய் வளர்ந்தாள். மேலும் இந்திய பெண்கள் முன்னேற்றம் அடைய அநேக தொண்டுகளாற்றினார். இதன் மூலம் கல்கத்தா நகரில் அவருக்கு பண்டிதை என்ற கௌரவப் பெயர் சூட்டினர்.

ஒரு வங்காள வாலிபரை தனது 22வது வயதில் மணந்து கொண்டார். அஸ்ஸாம் பகுதியில் தன் கணவரோடு வாழும்போது, லூக்கா சுவிசேஷம் அவர் கையில் கிடைத்தது. கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு அவரை கிறிஸ்தவத்தை நோக்கி ஈர்த்தது. அது அவரது கணவனுக்குப் பிடிக்கவில்லை. இரண்டு ஆண்டுகளில் அவளது கணவரும் காலரா வியாதியால் மரித்துப் போனார். இளம் விதவையான **இராமாபாய்** தன் மகள் மனோரம்மாவுடன் பூனா நகருக்குச் சென்றார். அநேக அயல் நாடுகளில் பண்டிதராமாபாய் புறக்கணிக்கப்பட்ட பெண்களின் சேவையைக் குறித்து விளக்கமாக பொதுக் கூட்டங்களில் பேசி வந்தார். இதை ஆர்வத்துடன் கேட்ட மக்கள் அவரது சேவைக்கு ஆதரவு கொடுக்க முன் வந்தனர். அப்படிப்பட்ட சொற்பொழிவாற்ற இங்கிலாந்திற்குச் சென்றபோது கிறிஸ்துவின் அன்பினால் கவரப்பட்டவராய் அங்கே திருமுழுக்குப் பெற்று கிறிஸ்துவை ஆத்ம மீட்பராக ஏற்றுக் கொண்டார்.

நலிவுற்ற, ஒடுக்கப்பட்ட இந்திய பெண்கள், விதவைகள் அநாதை பெண்குழந்தைகள் அனைவரையும் சேர்த்து ஒரு இல்லத்தை பூனாவில் நிறுவினார். இதில் கணவனால், பெற்றோரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆஸ்பத்திரியில் கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் அனைவரையும் தன் இல்லத்தில் சேர்த்தார். ஆனால் இடவசதி போதிய அளவு இல்லாத காரணத்தால் பூனாவில் **"முக்தி"** என்ற இல்லத்தை அநேகரின் உதவியோடு கட்டினார். விடுதியில் உள்ள

பெண்களுக்கு சுய தொழில் செய்ய வசதியாக தொழிற் பயிற்சியைக் கொடுத்தார். செவிலியர்களாகவும், நெசவு தொழில் செய்கிறவர்களாகவும் கல் உடைக்கும் தொழிலாளிகளாகவும் பயிற்சி பெற்றனர். மேலும் வேதாகம ஸ்திரிகளாகவும், தோட்டவேலை, வீட்டை பராமரிக்கும் வேலையிலும் பயிற்சி பெற்று வந்தனர். இதில் சுயமாக வேலை கிடைத்து பெண்கள் விடுதியை விட்டுச் சென்றனர். அவர்களுக்குப் பதிலாக நலிந்த பெண்களை மீண்டும் விடுதியில் சேர்த்தார்.

ஒரு நாள் முக்தி விடுதியில் சமையல் வேலை பார்க்கும் பெண்கள் **பண்டித ராமாபாயிடம்** வந்து மறுநாள் சமைப்பதற்கு உணவுப் பொருட்கள் ஒன்றுமில்லை என்றனர். பண்டித ராமாபாய் அந்தப் பெண்களிடம் நீங்கள் சமையல் அறைக்குச் சென்று அங்கு சங்கீதம் 34 : 10ஐ சொல்லி ஜெபித்துவிட்டு படுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அந்தப் பெண்களும் அப்படியே செய்தனர். அம்மாவும் **“சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது”** (சங். 34 : 10) என்ற வசனத்தை பலமுறை சொல்லி ஜெபித்துப் படுத்துக் கொண்டார்கள். நள்ளிரவில் அந்த இல்லத்தின் கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால் மூன்று மனிதர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அம்மாவிடம் தயவு கூர்ந்து இன்று இரவு மட்டும் உங்கள் விடுதியின் திண்ணையில் படுத்து இளைப்பாறி காலையில் செல்கிறோம் என்று கூறினர். அம்மா உடனே சில கொய்யாப் பழங்களையும் தண்ணீரையும் அவர்களுக்குக் கொடுத்து அவர்களை ஓய்வெடுக்கச் சொன்னார்கள். மீண்டும் அம்மா தன் அறையில் படுத்துக் கொண்டார்கள். அதிகாலை மீண்டும் அம்மாவின் அறை கதவு தட்டப்பட்து, அந்த மூவரும் அம்மாவுக்கு நன்றி சொல்லிவிட்டு புறப்பட ஆயத்தமாயினர். அதில் ஒருவன் அம்மா நாங்கள் மூவரும் அரிசி மூட்டைகளை வண்டியில் ஏற்றிச் செல்கிறோம். ஒரு வண்டியில் அச்சு ஒடிந்து போயிற்று அதை நாங்கள் இப்போது சரி செய்துவிட்டோம். நீங்கள் செய்த உதவிக்கு நன்றிக் கடனாக என் அரிசி மூட்டையில் ஒன்றை உங்கள் விடுதிக்கு இனாமாகத் தருகிறேன் என்று கூறி ஒரு மூட்டை அரிசியை அம்மாவின் அறையில் கொண்டு வைத்தான். மற்ற இருவரும் அவன் செய்தது போல ஆளுக்கொரு மூட்டை அரிசியை கொண்டு கொடுத்தார்கள் பின்பு மூவரும் அம்மாவிடம் சொல்லிவிட்டு புறப்பட்டு சென்றுவிட்டார்கள். இவ்வாறு மூன்று மூட்டை அரிசியை கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார். இவ்வாறு அந்த விடுதியில் உள்ள பெண்களை இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களில் ஆச்சரியமாக போஷித்து கர்த்தர் நடத்தினார்.

சிறு பெண் குழந்தைகளை பராமரிக்கும்படி சில பெண்களை ஆயாக்களாக விடுதியில் வைத்துக் கொண்டார். ஆயிரக்கணக்கான கைவிடப்பட்ட பெண்கள் **இராமாபாய்** நடத்திவந்த **“முக்தி”** இல்லத்தில் நன்றாகப் பராமரிக்கப்பட்டார்கள். இவ்வாறு சுமார் 2000 பெண்களும் பெண் குழந்தைகளும் இவ்வில்லத்தில் அடைக்கலம் புகுந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட உதவியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இன்றும் சிறப்பாக இந்த இல்லம் பெண்களுக்கென்று நடத்தப்பட்டு வருகிறது. 1922 ஆம் ஆண்டு தான் நேசித்துவந்த ஆண்டவரண்டை சேர்ந்தார்கள். அவர்கள் அடிக்கடி சொல்லுவது : **“ஒரே ஒரு வாழ்வுதான். அது சீக்கிரம் கடந்து போகும் கிறிஸ்துவுக்கென்று செய்யப்பட்டது எதுவோ அதுவே நிலைத்திருக்கும்”** என்பதாகும்.

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK **A/c. No. : 105010100094373 (IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank **A/C. No. 613901112799 (IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9698244522**

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. Robinson. S.**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9688144522<br>9688444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**TMB**
**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

அதிகமான இன்டர்நெட் பயன்பாட்டினால் ரத்த அழுத்தமும் உடல் எடையும் அளவுக்கு அதிகமாக அதிகரிக்கும் என ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவில் டெட்ராய்டு நகரிலுள்ள ஹென்றி போர்டு மருத்துவமனை டாக்டர்கள் 14 முதல் 17 வயதுடைய 335 பேரிடம் நடத்திய ஆய்வின் முடிவில், வாரத்தில் 1 மணி நேரம் இன்டர்நெட் பயன்படுத்தும் 134 பேரில் 26 பேர் உயர் ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 46 சதவீதத்திற்கும் அதிகமானோர் அதிக உடல் எடையால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

---

நைஜீரியாவின் வடகிழக்கு மாகாணங்களில் மசூதி உள்ளிட்ட இடங்களில் தற்கொலை படை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சுமார் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

---

ஏமனில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் பயங்கர குண்டு வெடிப்பு நடத்தப்பட்டது. இதில் 13 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 38 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

---

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தின் புதிய பிரதமராக சர்மா ஒலி, தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதியான பீனிக்ஸ் நகரிலிருந்து வடகிழக்குப் பகுதியான பாஸ்டன் நகரை நோக்கிய ஏர்பஸ் 320 ரக விமானம் புறப்பட்டுச் சென்றது. நடு வானத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, விமானி இருக்கையில் இருந்து சுருண்டு விழுந்தார். உடனடியாக அங்கிருந்த ஒரு செவிலியரின் உதவியுடன் முதலுதவி அளிக்க முற்பட்டார் சக விமானி. ஆனால் சில விநாடிகளிலேயே அவர் உயிர் பிரிந்து விட்டது. ஆனால் நிலமையை சாதுரியமாகக் கையாண்ட சக விமானி உடனடியாக விமானத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து 147 பயணிகள், 5 சிப்பந்திகள் ஆகியோரின் உயிரைக் காப்பாற்றினார். விமானம் அவசரமாக அருகிலிருந்த விமான நிலையத்தில் தரையிறங்கியது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!



...தம்முடைய ஊழியக்காரரை
அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார். சங். 104 : 4

# ஷாலோம் சுதேச ஊழியர்
# குடும்ப எழுப்புதல் தரிசன முகாம் - 2015

| இடம் | நாள் |
|---|---|
| SPIRITUAL LIFE CENTRE<br>பரூச், குஜராத் | 2015 நவம்பர்<br>17 முதல் 20 வரை |

பாடல் & ஆராதனை **Pr. சன்னி விஷ்வாஸ்,** பூனே



வல்லமையின் செய்தி :

**Bro. G.P.S. ராபின்சன்** (இயேசு சந்திக்கிறார், சென்னை)

**Rev. ஜோசப் பாலச்சந்திரன்** (நல்ல சமாரியன் ஐக்கியம், மதுரை)

**Bro. ஜெபசிங்** (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)

**Rev. சகரியா ராபர்ட்** (நல்ல சமாரியன் ஐக்கியம், மதுரை)

**Rt. Rev. Dr. V. தேவதாஸ்** (பேராயர், ஷாலோம் திருமண்டலம்)

சகோதரி. **வஹிதா தேவதாஸ்** (அன்பு பகிர்வு இயக்கம்)

**மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்**



# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ஷீலா R. புரியா** |
| தந்தையின் பெயர் | : | பகதுர் புரியா |
| தாயாரின் பெயர் | : | நபு புரியா |
| பிறந்த நாள் | : | 13.09.2008 |
| படிக்கும் வகுப்பு | : | IInd Std. |
| சொந்த ஊர் | : | ஜாராடாபர் |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:– இவளுடைய தந்தை இயேசுவை அறியாததற்கு முன்பு பீடி & சாராயம் குடித்தல், தம் பாக்கு போடுதல் போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். ஷீலாவின் தாய் திடீரென பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகள் மிகவும் வேதனைக்குள்ளாக வாழ்ந்து வந்தார்கள். அவரின் சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் செய்தும், மருத்துவம் பார்த்தும் நோய் குணமாகவில்லை. இந்த சூழ்நிலையில் இவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஊழியம் செய்துவந்த போதகர். கல்சிங் புரியா அவர்களின் வீட்டிற்கு ஜெபிக்கும்படி சென்றார்கள். அங்கு ஊழியர் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி ஷீலாவின் தாயாரின் சுகத்திற்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் அவருக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அதன் மூலம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தார்கள். பின்னர் ஊழியம் செய்ய தேவன் கொடுத்த வாஞ்சையினிமித்தம், தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

மாணவியைக்குறித்து :– ஷீலா நன்றாக படிப்பாள். ஜெபம் செய்வாள். கபடி விளையாட்டிலும் ஆர்வம் உண்டு. இவளுக்கு 3 சகோதரர்கள் உண்டு.

ஜெபியுங்கள் :– இவளுக்காக, படிப்பிற்காக, சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

மாணவியைத் தாங்குபவர் :– **Mr. John. C.H. Chennai.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம்.

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.